முனைவர் எம்.எம்.முஸ்தபா
இயக்குநர்
தேசிய வாழை ஆராய்ச்சி மையம்
தாயனூர் அஞ்சல், தோகைமலை சாலை
திருச்சிராப்பள்ளி - 620 102, Mobile No. 9442553117.

## வாழை உழவர்களின் கவனத்திற்கு

திருச்சி, கரூர், புதுக்கோட்டை, கோவை, ஈரோடு, சேலம், திருவண்ணாமலை, வேலூர், செங்கல்பட்டு போன்ற வாழை சாகுபடி பகுதிகளில் வாழை மரங்கள் 4 முதல் 5 மாத வளர்ச்சி பருவத்தில் இருக்கின்றன. இது வாழை வளர்ச்சிப் பருவங்களில் மிக முக்கியமான வளர்ச்சி பருவம் ஆகும். இத்தருணத்தில், ஊட்டச்சத்துப் பற்றாக்குறை ஏற்பட்டால் மகசூல் இழப்பு அதிக அளவில் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே, இக்கால கட்டத்தில், வாழை மரம் ஒன்றுக்கு 200 கிராம் யூரியா, 300 கிராம் மூரேட் ஆஃப் பொட்டாஷ், 20 கிராம் பென்டோனைட் சல்பர், 50 கிராம் டோலமைட் போன்ற உரங்களை மரத்திலிருந்து 1.5 அடி தள்ளி கின்னம் பறித்து இடவேண்டும். இத்துடன் மரமொன்றுக்கு 30 கிராம் பியூரடான் குருணை மருந்துடன் 5 கிலோ மக்கிய தொழு உரத்தையும் சேர்த்து இடவேண்டும். மேலும், திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தில் கிடைக்கும் பனானா சக்தி என்னும் வாழை நுண்ணூட்டச் சத்துக் கலவையை, 2 சத கரைசலாக தகுந்த ஒட்டுந்திரவம் சேர்த்து இலைமேல் தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் வாழையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 20000 முதல் 25000 வரை கூடுதல் வருவாய் ஈட்டலாம் என்று திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குநர், முனைவர் எம். எம். முஸ்தபா தெரிவிக்கின்றார். மேலும் விபரங்களுக்கு, இயக்குநர், தேசிய வாழை ஆராய்ச்சி மையம், தாயனூர் அஞ்சல், தோகைமலை சாலை, திருச்சிராப்பள்ளி - 620 102 மற்றும் இம்மையத்தின் முதன்மை விஞ்ஞானி, முனைவர் கே.ஜே.ஜெயபாஸ்கரன் அவர்களை 9344353587 அல்லது 9940788015 எண்களில் தொடர்பு கொள்ளலாம்.